## முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018
## First Term Test - Grade 12- 2018

சுட்டெண் : ........................

**கணக்கீடு I**
**Accounting I**

காலம் : 2 மணி

- **01 – 30 வரையிலான வினாக்களுக்கு சரியான விடைகளை இனங்கண்டு அருகிலுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.**
- **31 – 50 வரையிலான வினாக்களுக்கு சரியான விடைகளை உரிய இடைவெளிகளில் எழுதுக.**

1. கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை சிறப்பாக விபரிக்கும் கூற்று,
   1. கணக்கீட்டு அலகு தொடர்பாக அக்கறைச் செலுத்தும் தரப்பினர்களுக்கு தீர்மானம். எடுப்பதற்குத் தேவையான பொருளாதாரத் தகவல்களை வழங்குதல்.
   2. கணக்கீட்டு அலகு தொடர்பாக அக்கறைச் செலுத்தும் உள்ளகக் கட்சியினருக்கு அவசியமான பொருளாதாரத் தகவல்களை வழங்குதல்
   3. கணக்காய்வுக்கு அவசியமான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்
   4. கணக்கீட்டு அலகு தொடர்பில் அக்கறைச் செலுத்தும் வெளியக தரப்பினர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குதல்.
   5. நிதி வசதிகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் நிதி நிறுவனங்களுக்கு அவசியமான பொருளாதாரத் தகவல்களை வழங்குதல் (…..)

2 இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் புதிய கணக்கீட்டு நியமமொன்று அறிமுகப்படுத்தப்படல் என்பது கணக்கீட்டில் செல்வாக்குச் செலுத்தும் எச்சூழல் காரணிக்குரியதாகும்.?

1. பொருளாதார மற்றும் அரசியல் சூழல்
2. தொழில்நுட்பச் சூழல்
3. சட்டச் சூழல்
4. சமூக மற்றும் கலாசாரச் சூழல்
5. நுட்பம் மற்றும் தொழில்சார் சூழல் (…..)

3 பின்வருவனவற்றுள் நிதிக் கணக்கீடு மற்றும் முகாமை கணக்கீடுகளுக்கிடையேயான வேறுபாடாக இனங்காண முடியாதது,

| | நிதிக் கணக்கீடு | முகாமைக் கணக்கீடு |
|---|---|---|
| 1. | பொதுத் தேவை கருதி தகவல் வழங்குதல் | விஷேட தேவைக்காக தகவல் வழங்குதல் |
| 2. | பிரதானமாக வெளியக தரப்பினர்களுக்கு அவசியமான தகவல் வழங்குதல் | பங்குதாரர்கள் உட்பட முகாமையாளர்களுக்கு அவசியமான தகவல் வழங்குதல். |
| 3. | சட்டத் தேவைப்பாடுடையது | முகாமைத்துவத் தேவைப்பாடுடையது. |
| 4. | வரலாற்றுத் தகவல்களை மாத்திரம் வழங்குதல் | கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால தகவல் வழங்குதல் |
| 5. | முழு வியாபாரத்தையும் தனி அலகாக கருதி தகவல் வழங்குதல் | தேவையான விடயங்கள் தொடர்பில் தகவல் வழங்குதல். |

(…..)

4. பின்வருவனவற்றில் எது /எவை நிதிக்கூற்றக்களின் தொகுதியினுள் உள்ளடக்கப்படுவதில்லை

A - இலாப நட்டக்கூற்று / வருமானக் கூற்று
B - வங்கி கணக்கிணக்கக் கூற்று
C - கடன்பட்டோன் இணக்கக் கூற்று
D - நிதி நிலமைக் கூற்று
E - காசுப்பாய்ச்சல் கூற்று

1. A,D, E மாத்திரம்
2. A,B, C மாத்திரம்
3. B, C மாத்திரம்.
4. D, E மாத்திரம்
5. A,B,C,D, E ஆகிய அனைத்தும் (…..)

5. பின்வருவனவற்றுள் கணக்கீட்டுச் செய்முறையை ஒழுங்கு வரிசைப்படி சரியாக காட்டும் முறை எது?

A - முதன்மைப் பதிவேடுகளில் பதிதல்
B - மூல ஆவணங்களை திரட்டுதல்
C - கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுதல்
D - பரீட்சை மீதியைத் தயாரித்தல்
E - பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றுதல்

1. B D C A E 2. C B A E D 3. C B A D E 4. C A B E D 5. D B C A E (…..)

6. சமூக மற்றும் கலாசார சூழல் மாறிகளை மாத்திரம் கொண்ட தொகுதி,

1. நாணயமாற்று வீதம், சனத்தொகை, கணக்கீட்டு நியமம், விலைமட்டம்.
2. வரிக்கொள்கை, வட்டி வீதம், சனத்தொகை, பழக்க வழக்கங்கள்
3. கணக்கீட்டு நியமம், நம்பிக்கைகள், நாணயமாற்று வீதம், கம்பனிச் சட்டம்.
4. தனிநபர் வாழ்க்கைக் கோலம், சனத்தொகை, மனப்பாங்குகள், குடிப்பரம்பல்
5. நம்பிக்கைகள், மனப்பாங்கு, அரச கொள்கை, சனத்தொகை (…..)

7. சந்துனி வியாபாரத்தின் வங்கி மேலதிகப் பற்றை முழுமையாகத் தீர்க்கும் பொருட்டு ரூ. 80,000 தொகை உரிமையாளரினால் செலுத்தப்பட்டது.
மேற்படி கொடுக்கல் வாங்கல் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை சரியாகக் காட்டுவது.

| | சொத்துக்கள் | = | உரிமையான்மை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | + 80,000 | = | + 80,000 | | - |
| 2. | + 80,000 | = | - | | + 80,000 |
| 3. | (80,000) | = | - | | (80,000) |
| 4. | - | = | + 80,000 | | (80,000) |
| 5. | - | = | + 80,000 | | + 80,000 |

(…..)

8. பெதும் என்பவர் 2018.10.01 இல் ரூ. 200,000 மூலதனமிட்டு புதிய வணிகமொன்றை ஆரம்பித்தார். 2018.10.31 இல் வணிகத்தின் உரிமையாண்மை ரூ. 410,000 ஐக் காட்டியதுடன், பெதும் 2018 ஒக்டோபர் மாதத்தினுள் ரூ. 50,000 கிரயமான பண்டங்களை தனது சொந்தத் தேவைக்காக எடுத்தார். 2018 ஒக்டோபர் மாதத்தின் மொத்தச் செலவு ரூ. 480,000 ஆகும். எனின், 2018 ஒக்டோபர் மாதத்தின் மொத்த வருமானம் எவ்வளவு?

1. ரூ. 550,000 2. ரூ. 640,000 3. ரூ. 740,000 4. ரூ. 760,000 5. ரூ. 780,000 (…..)

9. பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்டுள்ள வியாபாரமொன்று ரூ. 150,000 கிரயமான பண்டங்களை VAT உட்பட ரூ. 230,000 க்கு கடனுக்கு விற்பனை செய்தது. (VAT 15% ஆகும்)
மேற்படி கொடுக்கல் வாங்கல் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தேறிய தாக்கம் யாது?

| | சொத்துக்கள் | = | உரிமையான்மை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | + 80,000 | = | + 50,000 | | + 30,000 |
| 2. | + 100,000 | = | + 70,000 | | + 30,000 |
| 3. | + 200,000 | = | + 200,000 | | - |
| 4. | + 200,000 | = | + 160,000 | | +40,000 |
| 5. | + 230,000 | = | +230,000 | | - |

(…..)

10. அஜித் வியாபாரத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பின்வருமாறு:

| | 2018.03.31 (ரூ.000) | 2017.04.01 (ரூ.000) |
|---|---|---|
| **<u>சொத்துக்கள்</u>** | | |
| காணி கட்டடம் | 1000 | 750 |
| மோட்டார் வாகனம் | 700 | 500 |
| காரியாலய உபகரணம் | 300 | 250 |
| இருப்பு | 50 | 60 |
| வியாபார வருமதியாளர் | 40 | 25 |
| **<u>பொறுப்புக்கள்</u>** | | |
| வங்கிக்கடன் | 700 | 400 |
| வியாபார சென்மதியாளர் | 100 | 75 |

**மேலதிக தகவல்கள்:**
1. அஜித்தின் தந்தையின் சத்திர சிகிச்சைக்காக ரூ. 250,000 தொகை வியாபார பணத்தின் மூலம் செலுத்தப்பட்டது.
2. வியாபாரத்தின் ஆண்டுக்கான இலாபம் ரூ. 360,000 ஆகும். மேலும் ஆண்டு காலத்தில் அஜித்தினால் இடப்பட்ட மேலதிக மூலதனம் ரூ. 120,000 ஆகும்.
3. அஜித்தின் சொந்த தேவைக்காக ஒரு தொகை பணம் வியாபாரத்திலிருந்து எடுக்கப்பட்டது.

அஜித்தின் சொந்த தேவைக்காக பற்றிய காசு எவ்வளவு?

1. ரூ. 20,000 2. ரூ. 50,000 3. ரூ. 100,000 4. ரூ. 200,000 5. ரூ. 250,000 (…..)

11. வியாபாரமொன்றின் ரூ. 75,000 பெறுமதியான கடன்கொடுத்தோர் தொகையைத் தீர்ப்பதற்காக உரிமையாளரின் சொந்த நிதியின் மூலம் ரூ. 73,000 செலுத்தப்பட்டது. மேற்படி கொடுக்கல் வாங்கல் காரணமாக தேறிய சொத்துக்கள் மற்றும் தேறிய இலாபம் என்பவற்றில் ஏற்படக்கூடிய தாக்கம் யாது?

| | தேறிய சொத்துக்கள் | | தேறிய இலாபம் |
|---|---|---|---|
| 1. | ரூ. 75,000 இனால் குறையும். | - | ரூ. 75,000 இனால் அதிகரிக்கும். |
| 2. | ரூ. 73,000 இனால் அதிகரிக்கும். | - | ரூ. 73,000 இனால் அதிகரிக்கும். |
| 3. | ரூ. 73,000 இனால் அதிகரிக்கும். | - | ரூ.75,000 இனால் அதிகரிக்கும். |
| 4. | ரூ. 75,000 இனால் அதிகரிக்கும். | - | ரூ. 2000 இனால் அதிகரிக்கும். |
| 5. | மாற்றமில்லை | - | மாற்றமில்லை |

(…..)

12. கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களுள் உரிமையாண்மையில் தாக்கம் செலுத்தாத கொடுக்கல் வாங்கல் எது /எவை?

A - பண்டங்கள் அதன் கிரயத்தில் விற்பனை செய்யப்படல்
B - வியாபார வருமதியாளர்களிடமிருந்து காசு பெறுவனவின் போது அனுமதித்த கழிவு
C - உரிமையாளர் தனது சொந்த நிதியின் மூலம் வியாபாரத்தின் வங்கிக்கடன் தவணைப்பணத்தைச் செலுத்துதல்.

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. C மாத்திரம் 4. A, B மாத்திரம் 5. B, C மாத்திரம் (…..)

- **கீழ்வரும் தகவலைப் பயன்படுத்தி 13ஆம் 14ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

வியாபாரமொன்றினால் ரூ. 50,000 கிரயமான பண்டங்கள் சுமுது என்பவருக்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன. அப் பண்டங்களில் ரூ. 5000 கிரயமான பண்டங்கள் குறித்த கட்டளைக்குப் பொருந்தாமையினால் சுமுதுவினால் திருப்பியனுப்பப்பட்டன. பின்னர் மிகுதித் தொகைக்கு காசோலை கிடைக்கப்பெற்றதுடன் அக்காசோலை வங்கியினால் மறுக்கப்பட்டதாக அறிவித்தல் கிடைக்கப்பெற்றது.

13. மேற்படி கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு மிகப் பொருத்தமான முதன்மைப் பதிவேடுகளின் ஒழுங்குமுறை,

A - விற்பனை நாளேடு B - பொது நாட்குறிப்பேடு
C - காசுப்பெறுவனவு நாளேடு D - விற்பனைத் திரும்பல் நாளேடு

1. A B C D 2. A C B D 3. A D C B 4. A D B C 5. B D C B (…..)

14. மேற்படி கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு மிகப் பொருத்தமான மூல ஆவணங்களின் ஒழுங்கு வரிசை,

A - பற்றுச்சீட்டு B - விற்பனைப் பட்டியல்
C - செலவுத்தாள் D - நாட்குறிப்புக் கச்சாத்து

1. A B C D 2. B C A D 3. B C D A 4. B A C D 5. D C A B (…..)

15. கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களுள் வணிகமொன்றின் விற்பனை தினசேரியில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் எது?
1. எல்லாப் பொருட்களினதும் கடன் விற்பனை
2. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் காசு விற்பனை
3. மீள் விற்பனைப் பொருட்களின் காசு விற்பனை
4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கடன் விற்பனை
5. மீள் விற்பனைப் பொருட்களின் கடன் விற்பனை (…..)

16. வியாபாரமொன்றின் சில்லறைக்காசு தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:
- 2018.10.01 இல் சில்லறைக் காசாளரிடமிருந்த காசு மீதி ரூ. 350
- 2018.10.01 இல் சில்லறைக் காசு மீள் நிரப்பல் ரூ. 3650
- 2018.10.31 இல் சில்லறைக் காசாளரிடம் மீதமாகவுள்ள காசு ரூ. 500

இவ்வியாபாரத்தின் சில்லறைக்காசு வசக்கட்டு நிதி மற்றும் 2018 ஒக்டோபர் மாத சில்லறைச் செலவுகள் என்பன முறையே,

| | சில்லறைக்காசு வசக்கட்டு நிதி (ரூ) | சில்லறைச் செலவுகள் (ரூ) |
|---|---|---|
| 1. | 3500 | 3,650 |
| 2. | 3500 | 4000 |
| 3. | 4000 | 3500 |
| 4. | 4000 | 3650 |
| 5 | 4000 | 4000 |

(…..)

- **17,18,19 ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தகவலைப் பயன்படுத்தி விடை தருக.**

வரையறுக்கப்பட்ட அகலங்க பொதுக்கம்பனியின் 2018 மார்ச் மாத வங்கிக் கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கிய தகவல்கள் பின்வருமாறு:

| | | காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கின் சுருக்கம் (ரூ.000) | வங்கிக் கூற்றப்படி சுருக்கம் (ரூ.000) |
|---|---|---|---|
| 1. | 2018.03.01 இல் மீதி | 600 | 550 |
| 2. | காசு வைப்பு | 300 | 300 |
| 3. | காசோலை வைப்பு | 1000 | 1050 |
| 4. | காசோலை கொடுப்பனவு | 600 | 400 |
| 5 | வைப்பு செய்து மறுக்கப்பட்ட காசோலை | - | 50 |

2018 மார்ச் மாத வங்கிக்கூற்றில் பதியப்பட்டுள்ள ஆனால் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு:

| | (ரூ. 000) |
|---|---|
| நேரடிப் பெறுவனவு – பங்கிலாபம் | 10 |
| நிலையான கட்டளைக் கொடுப்பனவு காப்புறுதி | 30 |

2018.03.01 இல் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கின் படி வங்கி மீதியும், வங்கிக் கூற்று மீதியும் வேறுபடுவதற்கான காரணம் ரூ. 50,000 பெறுமதியான வைப்பு செய்து வசூலிக்கப்படாத காசோலையாகும். இக்காசோலை 2018 மார்ச் மாதத்தினுள் வங்கியினால் வசூலிக்கப்பட்டுள்ளது.

17. 2018.03.31 இல் நிதி நிலமைக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய வங்கி மீதி எவ்வளவு?

1. ரூ. 1,230,000 2. ரூ. 1,300,000 3. ரூ. 1,470,000 4. ரூ. 1,530,000 5. ரூ. 1,580,000 (…..)

18. 2018.03.31 இல் வங்கிக் கூற்றுப்படி மீதி யாது?

1. ரூ. 1,400,000 2. ரூ. 1,430,000 3. ரூ. 1,440,000 4. ரூ. 1,460,000 5. ரூ. 1,510,000 (…..)

19. 2018 மார்ச் மாதத்தினுள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு இன்னும் கொடுப்பனவுக்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி எவ்வளவு?

1. ரூ. 50,000 2. ரூ. 200,000 3. ரூ. 230,000 4. ரூ. 280,000 5. ரூ. 310,000 (…..)

20. சுமுது பொதுக்கம்பனியின் 2018 ஒக்டோபர் 31 இல் வங்கிக்கூற்றுப்படி மீதி ரூ. 60,000 ஐக் காட்டியதுடன், அன்றைய தினத்திலான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் படி வங்கி மீதி ரூ 50,000 ஐக் காட்டியது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது பின்வரும் வேறுபாடுகள் இனங்காணப்பட்டன.

- கடன்பட்டோர் நேரடி வைப்பு மற்றும் வங்கிக் கட்டணம் என்பன முறையே ரூ. 20,000 மற்றும் ரூ. 4000 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படவில்லை.
- 2018.10.31 இல் வழங்கப்பட்டு இன்னும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூ. 24,000 ஆகும்.

2018.10.31 இல் வைப்பு செய்து வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி எவ்வளவு?

1. ரூ. 30,000 2. ரூ. 50,000 3. ரூ. 72,000 4. ரூ. 75,000 5. ரூ. 80,000 (…..)

21 கீழே தரப்பட்டுள்ள நாட்குறிப்பு பதிவுக்குரிய விளம்பல் எது?

- பெற்ற கழிவுக் கணக்கு – வரவு 5,000
- கொடுத்த கழிவுக் கணக்கு – வரவு 5,000
  - தொங்கல் கணக்கு – செலவு 10,000

1. ரூ. 5,000 கொடுத்த கழிவானது பெற்றக் கழிவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டமை திருத்தப்பட்டது.
2. ரூ. 5000 பெற்ற கழிவானது கொடுத்த கழிவுக்கணக்கில் செலவு வைக்கப்பட்டமை திருத்தப்பட்டது.
3. ரூ. 5000 கொடுத்த கழிவு கணக்கின் மீதி பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படாதது திருத்தப்பட்டது.
4. ரூ. 5000 கொடுத்த கழிவானது, பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமை திருத்தப்பட்டது.
5. கொடுத்த கழிவு, பெற்ற கழிவு என்பன பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படாதது திருத்தப்பட்டது.

(…..)

22. பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்டுள்ள வியாபாரமொன்று 15% VAT உட்பட ரூ. 115,000 பெறுமதியான பண்டங்களை கடனுக்கு விற்பனை செய்தது.
மேற்படி கொடுக்கல் வாங்கலுக்குப் பொருத்தமான இரட்டைப் பதிவு,

| | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (ரூ) | | VAT கணக்கு (ரூ) | | விற்பனைக் கணக்கு (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 100,000 | வரவு | 15,000 | செலவு | 85,000 | செலவு |
| 2. | 100,000 | வரவு | 15,000 | வரவு | 115,000 | வரவு |
| 3. | 115,000 | வரவு | 15,000 | செலவு | 100,000 | செலவு |
| 4. | 115,000 | வரவு | 17,250 | செலவு | 97,750 | செலவு |
| 5. | 132,250 | வரவு | 17,250 | செலவு | 115,000 | செலவு |

(…..)

23. கீழே X நிரலில் கணக்கு வகைகளும் Y நிரலில் அதில் பதியப்படும் உருப்படிகளும் தரப்பட்டுள்ளன.

| | X நிரல் | | Y நிரல் |
|---|---|---|---|
| (i) | சொத்துக் கணக்கு | A | பெற்ற கழிவு |
| (ii) | உரிமை கணக்கு | B | கொள்வனவு |
| (iii) | பொறுப்புக் கணக்கு | C | இறுதி இருப்பு |
| (iv) | வருமானக் கணக்கு | D | மேலதிக மூலதனம் |
| (v) | செலவுக் கணக்கு | E | அட்டுரு மின்கட்டணம். |

X நிரலில் உள்ள கணக்கு வகைகளையும் Y நிரலில் உள்ள உருப்படிகளையும் பொருத்தமாக இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடை,

1. C D B A E
2. C A E D B
3. C D E A B
4. D A C B E
5. B D E A C

(…..)

24. வியாபாரமொன்று ரூ. 40,000 பெறுமதியான பண்டங்களை 20% வியாபார கழிவு கழித்து கடனுக்கு விற்பனை செய்தது. பின்னர காசுப் பெறுவனவின் போது 10% காசுக் கழிவு வழங்கியது. மேற்படி கொடுக்கல் வாங்கல் காரணமாக விற்பனைக் கணக்கில் பதிவு செய்ய வேண்டிய தொகை எவ்வளவு?

1. ரூ. 28,800 2. ரூ. 32,000 3. ரூ. 35,000 4. ரூ. 36,000 5. ரூ. 40,000 (…..)

25. காசுக் கொடுப்பனவு நாளேட்டில் உள்ள கழிவு நிரலின் கூட்டுத்தொகையை பொதுப்பேரேட்டுக் கணக்கிற்கு மாற்றுவதற்கான சரியான இரட்டைப் பதிவு,

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கொடுத்த கழிவுக் கணக்கு | வரவு | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | செலவு |
| 2. | பெற்ற கழிவுக் கணக்கு | வரவு | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு | செலவு |
| 3. | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | வரவு | கொடுத்த கழிவு கணக்கு | செலவு |
| 4. | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | வரவு | பெற்ற கழிவு கணக்கு | செலவு |
| 5. | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | வரவு | பெற்ற கழிவு கணக்கு | செலவு |

(…..)

26. வியாபாரமொன்றின் 2018 ஒக்டோபர் மாதத்துடன் தொர்பான தகவல்கள் பின்வருமாறு:

- 2018.10.01 இல் வியாபார சென்மதிகள் ரூ. 100,000
- 2018.10.31 இல் வியாபார சென்மதிகள் ரூ. 120,000
- கடன் கொள்வனவு ரூ. 600,000
- கொள்வனவு திரும்பல் ரூ. 60,000

2018 ஒக்டோபர் மாதத்தினுள் கடன்கொடுத்தோனுக்கு செலுத்திய காசு எவ்வளவு?

1. ரூ. 320,000 2. ரூ. 480,000 3. ரூ. 520,000
4. ரூ. 560,000 5. ரூ. 620,000 (…..)

27. வியாபாரமொன்றின் 2018.03.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி சமப்படவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்குக்கு மாற்றப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

A - கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்க வேண்டிய ரூ. 5000 தொகையானது தவறுதலாக கடன் கொடுத்தோன் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
B - வழங்குனருக்கு செலுத்திய ரூபா 2500 ஆனது காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதியப்பட்டுள்ளதுடன், கடன்கொடுத்தோன் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 5200 எனப் பதியப்பட்டுள்ளது.
C - ரூ. 1500 கொடுத்த கழிவானது பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழுக்களைத் திருத்த முன்னர் தொங்கல் கணக்கு மீதி உருவான தொகை எவ்வளவு?

1. ரூ. 300 வரவு 2. ரூ. 600 செலவு 3. ரூ. 4200 வரவு
4. ரூ. 5700 செலவு 5. ரூ. 10,700 வரவு (…..)

28. பின்வரும் வழுக்களுள் பரீட்சை மீதி வெளிக்காட்டும் வழு எது /எவை?

A - மின்கட்டணத்திற்காக செலுத்திய ரூ. 5000 ஆனது மின்கட்டணக் கணக்கில் ரூ 6000 எனப்பதியப்பட்டுள்ளது.
B - பெற்ற வட்டி ரூ. 10,000 காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதுடன் வட்டிச் செலவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.
C - கடன்கொடுத்தோன் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூ. 8000 ஆனது பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லும் போது ரூ. 800 எனப் பதியப்பட்டுள்ளது.

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. C மாத்திரம்
4. A, B மாத்திரம் 5. A, C மாத்திரம் (…..)

- **கீழ்வரும் தகவலைப் பயன்படுத்தி 29ம், 30ம் வினாக்களுக்கு விடை தருக.**

வரையறுக்கப்பட்ட அல்பா பொதுக்கம்பனியின் 2018.03.31 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. 250,000 ஐக் காட்டியதுடன், அன்றைய தினத்திலான கடன்பட்டோன் பேரேட்டு பட்டியல் மீதி ரூ. 70,000 ஐக் காட்டியது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

- விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூ. 350,000 ஆனது கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 530,000 எனப் பதியப்பட்டுள்ளது.
- அறவிட முடியாக்கடனாக பதிவளித்த ரூ. 10000 மற்றும் கொடுத்த கழிவு ரூ. 5000 என்பன கணக்கேடுகளில் தவற விடப்பட்டிருந்தன.

29. 2018.03.31 இல் சீராக்கிய கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி எவ்வளவு?

1. ரூ. 55,000 2. ரூ. 70,000 3. ரூ. 235,000
4. ரூ. 250,000 5. ரூ. 430,000 (…..)

30. 2018.03.31 இல் சீராக்கிய கடன்பட்டோன் பேரேட்டு மீதி எவ்வளவு?

1. ரூ. 120,000 2. ரூ. 55,000 3. ரூ. 70,000
4. ரூ. 210,000 5. ரூ. 215,000 (…..)

- **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

31. பொருத்தமான நிரலின் கீழ் ''✓'' அடையாளமிடுவதன் மூலம் பின்வரும் கூற்றுக்கள் **உண்மை** அல்லது **பொய்** எனக் குறிப்பிடுக.

| | **கூற்றுக்கள்** | **உண்மை** | **பொய்** |
|---|---|---|---|
| A- | வணிக அலகு தொர்பாக அக்கறைச் செலுத்தும் உள்ளகக் கட்சியினருக்கு தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்குவதே முகாமைக் கணக்கீட்டின் பிரதான நோக்கமாகும். | ...................................... | ...................................... |
| B- | வணிகமொன்றின் பணத்தினல் அளவிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரமே கணக்கேடுகளில் பதியப்படல் வேண்டும். | ...................................... | ...................................... |
| C- | வணிகமொன்றின் தகவல் தேவைப்படும் வெளியகக் கட்சியினருக்கு தீர்மானம் மேற்கொள்வதற்காகவே விஷேட நோக்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. | ...................................... | ...................................... |
| D- | வியாபார கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைப் பதிவு செய்ததன் பின்னர் அதனூடாக நிதி நிலமைக் கூற்றை தயாரிக்க முடியும். | ...................................... | ...................................... |

32. நிதிக் கணக்கீடு தொடர்பான பின்வரும் கூற்றுக்கள் **உண்மை** அல்லது **பொய்** எனக் குறிப்பிடுக.

| | **கூற்றுக்கள்** | **உண்மை /பொய்** |
|---|---|---|
| A | உள்ளக மற்றும் வெளியகக் கட்சியினருக்கு தகவல் வழங்குகிறது. | ...................................... |
| B | முன்மதிப்பீட்டுத் தகவல்களை உள்ளடக்கியது. | ...................................... |
| C | குறித்த நிதியான்டுக்கான தகவல்களை வழங்குகிறது. | ...................................... |
| D | கணக்கீட்டு நியமங்களை கடைபிடிக்க தேவையில்லை | ...................................... |

33. நிதியறிக்கையிடலின் எண்ணக்கரு ரீதியான மாதிரிச் சட்டகத்திற்கமைய சொத்தொன்றின் குணாதிசயங்கள் 2 ஐக் குறிப்பிடுக.

1………………...............……………………………………………………………………..............…..

2………………...............……………………………………………………………………..............…..

34. வியாபாரமொன்று ரூ. 70,000 கிரயமான பொருட்களை ரூ 100,000 க்கு கடனுக்கு விற்பனை செய்ததுடன் ரூ. 20,000 பெறுமதியான கடன்பட்டோன் மற்றும் கடன் கொடுத்தோன் மீதிகளை எதிரீடு செய்தது. மேற்படி கொடுக்கல் வாங்கல்கள், இவ்வியாபாரத்தின் **சொத்து, பொறுப்பு, உரிமை** என்பவற்றில் ஏற்படுத்தும் தேறிய தாக்கத்தைக் குறிப்பிடுக.

A சொத்து ..............................................................................................................................................

B பொறுப்பு ..............................................................................................................................................

C உரிமை ..............................................................................................................................................

35. தகவல் தேவைப்படும் தரப்பினர்களின் நோக்கத்திற்கமைய நிதிக்கூற்றுக்களை வகைப்படுத்தும் பிரதான இரு முறைகளும் எவை?

1………………..............…………………………………………………………………….............…..

2……………..............…………………………………………………………………….............…..

36. நிதிக்கூற்றுக்களின் மூலகங்கள் 4 ஐக் குறிப்பிடுக.

1………………………….........…………  2…………………………….........…………

3………………………….........…………  4…………………………….........…………

37. சமன் வியாபாரத்தின் கடந்த இரு ஆண்டுகளுக்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | ஆரம்ப தேறிய சொத்து (ஜனவரி 01 இல்) (ரூ) | இறுதி தேறிய சொத்து (டிசம்பர் 31ல்) (ரூ) | பற்று (ரூ) | மேலதிக மூலதனம் (ரூ) | இலாபம்/ நட்டம் (ரூ) |
|---|---|---|---|---|---|
| 2016 | 200,000 | 330,000 | 20,000 | 50,000 | 100,000 |
| 2017 | ? | 500,000 | 15,000 | 60,000 | ? |

இவ்வியாபாரத்தின் 2017.01.01 இல் உள்ளவாறான தேறிய சொத்துக்களின் பெறுமதி மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு?

(1) 2017.01.01 இல் தேறிய சொத்துக்கள் - ...........................................................................................................

(2) 2017 ஆம் ஆண்டுக்கான இலாபம்/ நட்டம். - ......................................................................................................

38. கயா வியாபாரத்தின் 2018.10.01 இல் பின்வரும் மீதிகள் காணப்பட்டன.

| | (ரூ.000) |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| மோட்டார் வாகனம் | 1000 |
| தளபாட உபகரணங்கள் | 200 |
| இருப்பு | 300 |
| வியாபார வருமதிகள் | 100 |
| காசு | 100 |
| **பொறுப்புக்கள்** | |
| வங்கிக்கடன் | 500 |
| வியாபார கொடுக்குமதிகள் | 200 |

இவ்வியாபாரத்தின் 2018.10.01 இல் உரிமையாளரின் உரிமையாண்மை எவ்வளவு? .......................................

39. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக சொத்துக்களில் ஏற்படும் தாக்கத்தை **“அதிகரிக்கும், குறையும், மாற்றமில்லை”** என குறிப்பிடுக.

| | **கொடுக்கல் வாங்கல்கள்** | **அதிகரிக்கும் /குறையும் /மாற்றமில்லை** |
|---|---|---|
| A- | அறவிடமுடியாக்கடன் பதிவளிப்பு | .................................................................... |
| B- | மோட்டார் வாகனமொன்றை அதன் தேறிய பெறுமதியிலும் கூடிய பெறுமதியில் விற்பனை செய்தல் | .................................................................... |
| C- | கடன்பட்டோனிடமிருந்து காசுப் பெறுவனவு | .................................................................... |
| D- | கழிவு நீங்கலாக கடன்கொடுத்தோனுக்கு காசுக் கொடுப்பனவு | .................................................................... |

40 பின்வரும் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் பதிவு செய்வதற்கு மிகப் பொருத்தமான முதன்மை ஏடுகளைக் குறிப்பிடுக.

| | கொடுக்கல் வாங்கல்கள் /நிகழ்வுகள் | முதன்மை ஏடு |
|---|---|---|
| A- | உரிமையாளரினால் பண்டங்கள் பற்றப்பட்டன | ................................................................... |
| B- | கடன்பட்டோனிடமிருந்து கிடைத்த காசோலை வங்கியில் வைப்பு செய்து மறுக்கப்பட்டது. | ................................................................... |
| C- | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் காசுக் கொள்வனவு | ................................................................... |
| D- | கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ஒரு பகுதி வழங்குனருக்கு திருப்பியனுப்பப்பட்டது. | ................................................................... |

41 பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்குப் பொருத்தமான மூல ஆவணங்களையும், மூல ஏடுகளையும் குறிப்பிடுக.

| | கொடுக்கல் வாங்கல் | மூல ஆவணம் | மூல ஏடு |
|---|---|---|---|
| A- | கடன்கொடுத்தோனுக்கு காசோலைக் கொடுப்பனவு | ...................................... | ...................................... |
| B- | கடன்கொடுத்தோனுக்கு வழங்கிய காசோலை மறுக்கப்படல் | ...................................... | ...................................... |

42. பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களின் வகைகள் 4 ஐக் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………………..

2. ……………………………………………………………………………………………………..

3. ……………………………………………………………………………………………………..

4. ……………………………………………………………………………………………………..

43. வணிகமொன்றின் 2018.03.31 இல் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ. 380,000 ஐக் காட்டியதுடன், அத்தொகை அன்றைய தினத்திலான வங்கிக்கூற்று மீதியுடன் இணங்கவில்லை. பின்னர் பின்வரும் வேறுபாடுகள் இனங்காணப்பட்டன.

- நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூ. 50,000 மற்றும் வைப்பு செய்து மறுக்கப்பட்ட ரூ. 70,000 காசோலை என்பன காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.
- 2018.03.31 இல் தீர்வையாகாத காசோலைகள் மற்றும் வழங்கி மாற்றப்படாத காசோலைகள் என்பன முறையே ரூ. 75,000 மற்றும் ரூ. 150,000 ஆகும்.

(அ) 2018.03.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி எவ்வளவு?

.......................................................................................................................................................

(ஆ) 2018.03.31இல் வங்கிக் கூற்று மீதி யாது?

.......................................................................................................................................................

44 வங்கிக் கூற்று மீதியானது காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை விட அதிகமாக இருப்பதற்கு ஏதுவாகவுள்ள காரணிகள் 2 ஐக் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………..............…..

2. ……………………………………………………………………………………..............…..

45. பின்வரும் கணக்குகளை **சொத்துக் கணக்கு** அல்லது **பொறுப்புக் கணக்கு** என வகைப்படுத்துக.

**சொத்து /பொறுப்பு**

A- பொறுப்பு உத்தரவாத ஏற்பாட்டுக் கணக்கு ....................................................................

B- ஐயக் கடன் ஏற்பாட்டுக் கணக்கு ....................................................................

C- தளபாட உபகரண தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு ....................................................................

D- ஊழியர் நட்டஈடு ஏற்பாட்டுக் கணக்கு ....................................................................

46. 2018.10.01 இல் ரூ. 1450,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று சில்வா கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதற்காக ரூ. 450,000 உடன் காசு செலுத்தப்பட்டது. மிகுதித் தொகை பின்னர் தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.
மேற்படி கொடுக்கல் வாங்கலைப் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவை தருக.

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

47. பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்டுள்ள வியாபாரமொன்றின் 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் பின்வருமாறு:

| | (ரூ. 000) |
|---|---|
| விற்பனை ((VAT) உள்ளடங்கலாக) | 920 |
| கொள்வனவு ((VAT) உள்ளடங்கலாக) | 460 |
| 2017.04.01 இல் இருப்பு (கிரயம்) | 120 |
| 2018.03.31 இல் இருப்பு (கிரயம்) | 80 |

VAT 15% எனின், இவ்வியாபாரத்தின் 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த இலாபம் /நட்டம் எவ்வளவு?

..............................................................................................................................................................

48. விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூ. 155,000 ஆனது விற்பனைக் கணக்கில் தவறுதலாக ரூ. 150,000 எனப் பதியப்பட்டுள்ளது. மேற்படி வழுவை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவை தருக. (விளம்பல் அவசியமில்லை)

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

49. வியாபாரமொன்றின் 2018 ஒக்டோபர் மாத கணக்கேடுகளிலிருந்து கடன்பட்டோர் தொடர்பாக பெயர்ந்தெடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| **கடன்பட்டோர்** | **2018.10.01 இல் மீதி (ரூ)** | **கடன் விற்பனை (ரூ)** | **காசுப் பெறுவனவு (ரூ)** | **அறவிட முடியாக்கடன் (ரூ)** | **கொடுத்த கழிவு (ரூ)** |
|---|---|---|---|---|---|
| சிதும் | 60,000 (வரவு) | 25,000 | 25,000 | 5,000 | 3,000 |
| பெதும் | 50,000 (வரவு) | 20,000 | 18,000 | 3,000 | 1,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் 2018.10.31 இல் உள்ளவாறான கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

..............................................................................................................................................................

50. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் வியாபாரமொன்றின் கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கில் ஏற்படுத்தும் தாக்கத்தை **"அதிகரிக்கும், குறைக்கும், மாற்றமில்லை"** எனக் குறிப்பிடுக.

| | **கொடுக்கல் வாங்கல்** | **அதிகரிக்கும் /குறைக்கும் /மாற்றமில்லை** |
|---|---|---|
| A- | கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் திருப்பியனுப்பப்படல் | .................................................................. |
| B- | வியாபாரம் பயன்படுத்திய தளபாட உபகரணங்களின் கடன் விற்பனை | .................................................................. |
| C- | கொடுத்த கழிவு இரத்து செய்யப்படல் | .................................................................. |
| D- | கடன்பட்டோனிடமிருந்து காசுப் பெறுவனவு | .................................................................. |

❋ ❋ ❋

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

33 T II

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 12 – 2018

**First Term Test - Grade 12 - 2018**

சுட்டெண் : ......................

# கணக்கீடு II
# Accounting II

காலம் : 3 மணி

**1ஆம் 2ஆம் வினா உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01. சமிது என்பவர் 2018 ஜனவரி 01ஆம் திகதி தன்னிடமிருந்த ரூ. 250,000 காசினையும், ரூ. 1200,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்றையும் இட்டு தைத்த ஆடைகள் விற்பனை வியாபாரமொன்றை ஆரம்பித்தார். இவ்வியாபாரத்தின் 2018 ஜனவரி மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

| இல. | கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|
| 1. | ரூபா 30,000 கிரயமான தைத்த ஆடைகள் கொள்வனவு செய்யப்பட்டது. அவற்றுள் ரூ 20,000 ஆனவை கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டவையாகும். |
| 2. | ரூ. 10,000 கிரயமான தைத்த ஆடைகள் ரூ. 18,000 க்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டன. |
| 3. | ரூ. 12,000 பெறுமதியான கடன்கொடுத்தோன் தொகைக்கு 10% கழிவு நீக்கி காசு செலுத்தப்பட்டது. |
| 4. | காசாக செலுத்திய மின் கட்டணம் ரூ. 2000 |
| 5. | ரூ. 15,000 கிரயமான தைத்த ஆடைகள் ரூ. 25,000 க்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன. |
| 6. | ரூபா 6000 பெறுமதியான தைத்த ஆடைகள் வாடிக்கையாளரினால் திருப்பியனுப்பப்பட்டதுடன் அதன் கிரயம் ரூ. 5000 ஆகும். |
